பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21 08 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – மலேசியா இடையேயான நல்லுறவுகளை மேம்படுத்துவதில் ஜனநாயகம், பன்முகத்தன்மை உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் அடிப்படையாக உள்ளது என குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

2. இந்திய – பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவதில் இந்தியாவும், ஜப்பானும் முக்கியப் பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. ஜவுளித்துறையின் வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

4. இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான மண்டல அளவிலான மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

5. ஜோர்டானில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் **Ronak Dahiya** வெண்கலப் பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக போலந்து மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறார்.

போலந்து தலைநகர் வார்சாவில் பிரதமருக்கு ராணுவ அணிவகுப்புடன் பாரம்பரிய முறையிலான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

போலந்து பிரதமர் திரு. **Donald Tusk** உடன் இருதரப்பு பேச்சுகள் நடத்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் **Andrzej Duda**-வையும் சந்தித்துப் பேச உள்ளார்.

பின்னர் அங்கு வாழும் இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடும் பிரதமர், வர்த்தக தலைவர்கள் உள்ளிட்டோரையும் சந்திக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

போலந்துடனான இருதரப்பு உறவுகள் ஏற்பட்டு 70வது ஆண்டு நடைபெறும் நிலையில், 45 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் அந்நாட்டுக்கு செல்வது இதுவே முதல் முறையாகும்.

போலந்து பயணத்தை தொடர்ந்து, யுக்ரைன் அதிபர் திரு. வொலோடிமிர் ஜெலன்ஸ்கி அழைப்பை ஏற்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மறுநாள் அந்நாட்டுக்கு செல்கிறார்.

கடந்த 1992ஆம் ஆண்டில் யுக்ரைனுடன் ராஜ்ஜிய உறவுகள் ஏற்பட்ட பிறகு அந்நாட்டுக்குச் செல்லும் முதல் இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

யுக்ரைன் அதிபருடன் அரசியல், வர்த்தகம், பொருளாதாரம், முதலீடு, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் நல்லுறவை அதிகரிப்பது குறித்து பிரதமர் பேச்சு நடத்த உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

<<<<>>>>

இந்தியாவுக்கும் - மலேசியாவுவுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான முடிவு குறித்து குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் திரு. டத்தோ செரி அன்வர் பின் இப்ராஹிம் நேற்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் சந்தித்து பேசினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேம்படுத்துவதில் ஜனநாயகம், பன்முக கலாச்சாரம், பன்முகத்தன்மை, பரஸ்பர மரியாதை போன்ற முக்கிய அம்சங்கள் அடிப்படையாக அமைந்துள்ளதாக அப்போது திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்பை மேம்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய தெற்கு நாடுகளில் மலேசியா, இந்தியாவுடன் சிறந்த நட்பு நாடாக திகழ்வதாகவும் குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

ஆசியான் அமைப்பில் குறிப்பிடத்தக்க நாடாகவும், இந்தியா – பசிபிக் மற்றும் கிழக்கு நோக்கிய கொள்கை என்ற நிலைப்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கும் மலேசியாவுடன் இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

முன்னதாக நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை மலேசிய பிரதமர் சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, மலேசிய பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு, பாரம்பரிய மருத்துவ முறைகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், கலாச்சாரம், சுற்றுலா, விளையாட்டு, நிர்வாக சீர்திருத்தம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

<<<<>>>>

இந்திய – பசிபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவதில் இந்தியாவும், ஜப்பானும் முக்கியப் பங்கு வகிப்பதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இந்தியா - ஜப்பான் நாடுகளுக்கு இடையே இரண்டு ப்ளஸ் இரண்டு அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தை புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், ஜப்பான் நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Kihara Minoru,** வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Yoko Kamikawa** ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் புதிய முன் முயற்சிகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இருதரப்புக்கும் பயனளிக்கக்கூடிய பிராந்திய மற்றும் உலளாவிய பிரச்சினைகள் குறித்தும் அமைச்சர்கள் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

கூட்டத்திற்குப் பின்னர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்ட அறிக்கையில் இந்திய – பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவும், ஜப்பானும் முகியமான நாடுகள் என்றும், இவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேம்படுவது அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில் விரிவான, ஆக்கப்பூர்வமான கருத்துகளை ஜப்பான் அமைச்சர்களுடன் பகிர்ந்துகொண்டதாகவும், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளின் கருத்துகளும் பகிரப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜவுளித்துறையின் வளர்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசு ஆதரவு அளிப்பதற்கு உறுதிபூண்டிருப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று ஜவுளி தொடர்பான தொழில்களில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை பெறும் பயனாளிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

அப்போது ஜவுளித்துறை எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் மற்றும் இத்துறையில் அர்ப்பணிப்புடன் கூடிய தங்களின் உழைப்பு குறித்து தொழிலாளர்கள் மத்திய அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

ஜவுளித்துறைக்கு அவர்கள் அளித்து வரும் பங்களிப்புக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

இந்தத் தொழிலில் அதிக முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளில் ஜவுளித் தொழிலாளர்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு தொடர்ந்து அளிக்கும் என்றும் திரு. கிரிராஜ் சிங் உறுதியளித்தார்.

<<<<>>>>

இந்திய தொழில் கூட்டமைப்பான சி.ஐ.ஐ. சார்பில் இந்திய – ஆப்பிரிக்க வர்த்தக மாநாடு புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

இம்மாநாட்டில் இன்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் உரையாற்றுகிறார்.

‘ஒரே எதிர்காலத்தை உருவாக்குவது’ என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்த மாநாட்டில், வர்த்தகம், முதலீடு, கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

65 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிஜேபி பொறுப்பாளர்களாக அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராம்மாதவ், மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு-கஷ்மீரில் அடுத்த மாதம் 18, 25 மற்றும் அக்டோபர் ஒன்றாம் தேதிகளில் மூன்று கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது.

முதற்கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

<<<<>>>>

இந்தியாவுக்கும் - மலேசியாவுவுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான முடிவு குறித்து குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள மலேசிய பிரதமர் திரு. டத்தோ செரி அன்வர் பின் இப்ராஹிம் நேற்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் சந்தித்து பேசினார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகளை மேம்படுத்துவதில் ஜனநாயகம், பன்முக கலாச்சாரம், பன்முகத்தன்மை, பரஸ்பர மரியாதை போன்ற முக்கிய அம்சங்கள் அடிப்படையாக அமைந்துள்ளதாக அப்போது திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

ஆசியான் அமைப்பில் குறிப்பிடத்தக்க நாடாகவும், இந்தியா – பசிபிக் மற்றும் கிழக்கு நோக்கிய கொள்கை என்ற நிலைப்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கும் மலேசியாவுடன் இணைந்து செயல்பட இந்தியா உறுதிபூண்டிருப்பதாகவும் திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

முன்னதாக நேற்று பிரதமர் திரு. நரேந்திர மோடியை மலேசிய பிரதமர் சந்தித்து இருதரப்பு பேச்சுகள் நடத்தினார்.

<<<<>>>>

தமிழகத்திற்கு மத்திய அரசு ஒவ்வொரு நிதியாண்டிலும் கூடுதல் நிதியை வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசைக் காட்டிலும் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு ஏழு மடங்கு அதிக நிதி வழங்கியிருப்பதாக கூறினார்.

மலேசிய பல்கலைக்கழகத்தில் திருவள்ளுவர் இருக்கையை அமைக்க நடவடிக்கை எடுத்ததற்காக பிரதமருக்கு திரு. எல். முருகன் நன்றி தெரிவித்துக்கொண்டர்.

<<<<>>>>

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான மண்டல அளவிலான மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

ஐரோப்பிய யூனியனுடன் இணைந்து இந்தியா நடத்த உள்ள இந்த மாநாட்டில், இணையதளம் மூலமாக தற்போது எழுந்துள்ள பிரிவினைவாத அச்சுறுத்தல் அதிகரித்து வருவது குறித்தும், தீவிரவாத செயல்பாடுகளை இணைந்து முறியடிப்பதற்கான வழிகளை கண்டறிவது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

நவீன டிஜிட்டல் பிரிவினைவாதத்தை எதிர்த்து முறியடிப்பதில் முன்னணியில் திகழும் தெற்காசியா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த நிபுணர்கள், சட்ட அமலாக்க அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்களை ஒருங்கிணைக்கும் வகையிலும் இந்த மாநாடு நடைபெறுகிறது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் வாக்காளர்களை சேர்ப்பதற்கான சிறப்பு முகாம்கள் மூலம் புதிதாக 90 ஆயிரம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் ஜம்மு-கஷ்மீரில் தற்போது 88 லட்சத்து 3 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளதாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை ஒன்றாம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு அங்குள்ள 20 மாவட்டங்களிலும் சிறப்பு புகைப்பட வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் மேலும் கூறினர்.

ஜம்மு-கஷ்மீரில் மகளிர் மற்றும் முதல்முறை வாக்காளர்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் இன்று நடைபெறுகிறது.

தனியார் நட்சத்திர விடுதியில் இந்த மாநாட்டை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

17 ஆயிரத்து 616 கோடி ரூபாய் முதலீடுட்டுடன் 19 திட்டங்கள் தொடங்கப்படுவதுடன் 51 ஆயிரத்து 157 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 28 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட உள்ளதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

ஜோர்டானில் நடைபெறும் 17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் **Ronak Dahiya** வெண்கலப் பதக்கம் வென்றார்.

அம்மானில் நடைபெற்ற 110 கிலோ எடைப்பிரிவில் உலகின் இரண்டாம் நிலை வீரரான இவர், துருக்கியின் **Emurullah Capkan**-ஐ 6-1 என்ற புள்ளிக் கணக்கில் வென்றார்.

---------------

பங்களாதேஷில் நடைபெற இருந்த மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்டி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

என்றாலும் அதிகாரபூர்வமாக இப்போட்டிகளை பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம் நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 3ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை இப்போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், துபாய் மற்றும் ஷார்ஜா ஆகிய நகரங்களில் நடைபெறும் என்று ஐ.சி.சி. தலைமை நிர்வாகி **Geoff Allardice** வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இப்போட்டிகளை பங்களாதேஷில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அங்கு தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<The End>>>>**